In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 265/2016 |
| PW: | 2 |
| காவல் நிலையம்: | எட்டையபுரம் |
| தேதி: | 17-04-2026 நாள்: வெள்ளி |
| பெயர்: | மாரியப்பன் |
| த/பெ: | காளியப்பன் |
| ஊர்: | பிக்கிலிப்பட்டி |
| வேலை: | கிராம உதவியாளர் |
| வயது: | 56 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.04.2026**

(Accused A3, A4 present. A5 absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed).

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் பிக்கிலிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் தற்போது மீனாட்சி புரம் மற்றும் அய்யா கோட்டையூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 16.03.2015 ம் தேதி மீனாட்சி புரம் கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்த போது மதியம் 02.30 மணியளவில் நான் சாப்பிடுவதற்காக வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது, சர்வே எண். 56 ல் உள்ள நிலத்தில் அய்யா கோட்டையூரில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் வேலிக் கருவை மரங்களை சில நபர்கள் வெட்டிக் கொண்டிருந்தார்கள் மற்ற நபர்கள் வெட்டிய கருவேலை மரங்களை லாரியில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

3) அப்போது நான் அங்கேயிருந்த பன்னீர் செல்வத்திடம் அனுமதி பெற்று தான் மரத்தை வெட்டுகிறீர்களா என்று கேட்டேன். அனுமதிலாம் வாங்கிட்டோம் உன் வேலைய போயி பாரு என்று கூறினார். உங்களுக்கு அனுமதி கொடுத்தது சர்வே

எண். 9 ல் உள்ள நிலத்தில் மட்டும் தான். இந்த நிலத்தில் அல்ல என்று நான் கூறினேன்.

4) பின்னர் என்னிடம் வாக்குவாதம் செய்தார்கள். உடனே நான் கிராம நிர்வாக அலுவலர் ராமச்சந்திரன் மற்றும் வருவாய் ஆய்வாளர் முத்துலட்சுமி ஆகியோருக்கு போன் மூலம் தகவல் கொடுத்தேன். பின்னர் 04.00 மணியளவில் கிராம நிர்வாக அலுவலரும் வருவாய் ஆய்வாளரும் சம்பவ இடத்திற்கு வந்தார்கள்.

5) அப்போது பஞ்சாயத்து தலைவர் பன்னீர் செல்வம் எங்கள் அதிகாரிகளிடமும் என்னிடமும் தேவிடியா மவனே என்று அசிங்கமாக பேசினார். ராஜ்குமார் என்ற பெயர் பொறிக்கப்பட்ட லாரியை எதிரி மாரிமுத்து உடனே கருவேலை மரங்களை எடுத்து கொண்டு போகும் போது நாங்கள் வழிமறித்து பிடித்தோம்.

6) பின்னர் நாங்கள் லாரியுடன் 5 டன் கருவேலை மரங்களை எட்டையபுரம் காவல்நிலையத்திற்கு கொண்டு சென்றோம். பின்னர் நானும் கிராம நிர்வாக அலுவலரும் எட்டையபுரம் காவல்நிலையம் சென்று புகார் அளித்தோம். அந்த புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். ( **மேற்படி புகார்மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் அன்றாட பணி செய்ததற்கு வருகைப்பதிவேடு உண்டு என்றால் சரிதான் . மேற்படி பதிவேட்டில் என்ன என்ன பணி செய்தேன் என்ற விபரம் குறிப்பிடப்படும் என்றால் இல்லை.

2) கருவேல மரங்களை கைப்பற்றிய விபரங்களை எழுதி வைத்துள்ளேன் என்றால் இல்லை. அய்யா கோட்டையூருக்கும் எனது ஊருக்கும் சுமார் 1 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அய்யா கோட்டையூரிலிருந்து எட்டையபுரம் காவல்நிலையம் சுமார் 12 , 13 கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

3) அய்யா கோட்டையூரிலிருந்து கிராம நிர்வாக அலுவலம் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அரசு ஆவணங்களின் படி சர்வே எண். 56 ல் உள்ள கருவேல மரங்கள் இருந்ததா என்றால் இருந்தது.

4) மேற்படி ஆவணங்களை கிராம நிர்வாக அலுவலரிடம் கொடுத்தேன். அவர் வருவாய் ஆய்வாளரிடம் கொடுத்தார். கருவேல மரங்களை வெட்டிய நபர்களை எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியாது.

5) புகார் மனுவை போலிசார் எழுதினார்கள். மேற்படி புகாரானது எத்தனை பக்கங்களில் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் அதனை சரியாக படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

6) லாரி மற்றும் கருவேல மரங்களை பிடித்த பிறகு அன்றாட பணிகளை நானும் கிராம நிர்வாக அலுவலரும் செய்து வந்தோம் என்றால் சரிதான். லாரியை பிடித்த பிறகு எங்களது வேலைக்கு எந்த ஒரு இடையூறும் செய்யவில்லை என்றால் சரிதான்.

7) ராஜ்குமார் என்பவர் லாரி என்பதற்கான ஆவணங்கள் எதையும் வாங்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 9 ல் உள்ள கருவேல மரங்களை வெட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதற்கு அருகில் தான் சர்வே எண். 56 உள்ளது என்றால் இல்லை தொலைவில் உள்ளது.

8) சர்வே எண். 56 ல் உள்ள இடத்திற்கு சுற்றியுள்ள இடங்களில் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. பன்னீர் செல்வம் எந்த மரங்களையும் வெட்டவில்லை என்றால் சரிதான்.

9) எதிரி மாரிமுத்துவும் எந்த வித மரங்களையும் வெட்டவில்லை என்றால் சரிதான். அவர் டிரைவர். சில நபர்களின் பெயர் விபரங்கள் தெரியாது என்றால் கந்தசாமி என்பவர் மட்டும் தெரியும். கந்தசாமி விறகு வெட்டும் போது நான் பார்க்கவில்லை என்றால் அவர் தான் லோடு ஏற்றும் இடத்தில் இருந்தார்.

10) என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் மேற்படி விவரம் துலங்குமா என்றால் துலங்காது. லாரியை வழிமறித்து பிடித்த பனைப்பட்டி ஊர் அதிக மக்கள் நடமாடும் பகுதி என்றால் சரிதான். அங்குள்ள நபர்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.

11) 5 டன் எடையுள்ள மரங்கள் என்பதை எடை பார்க்கும் கருவி மூலம் அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். எடை பார்க்கும் கருவியை நாங்கள் கையில் கொண்டு சென்றோமா என்றால் இல்லை.

12) நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் சம்பவ இடம் சென்று கருவேலி மரங்கள் மற்றும் லாரியை கைப்பற்றிதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. மீனாட்சி புரம் பஞ்சாயத்து தலைவர் பன்னீர் செல்வத்திற்கும் உள்ள முன்விரோதம் காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.